**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், விருதுநகர்**

**மாவட்டம் (இ) திருவில்லிபுத்தூர்**

**முன்னிலை:–திரு.க.ஜெயக்குமார், பி.எல்.,எல்.எல்.எம்.,**

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் நாள் திங்கட்கிழமை**

**இ.ம.எண்.2/2025**
**இன்**
**எல்.ஏ.ஓ.பி.எண்.438/2022**

கோமதி ...மனுதாரர்/1ம் கோருரிமையாளர்.

**/எதிர்/**

1) சிறப்பு மாவட்ட வருவாய்
அலுவலர் (நில எடுப்பு)
சாத்தூர் சிப்காட்,
சாத்தூர்.

2) சாந்தி
3) ராதாகண்ணன் ...எதிர்மனுதாரர்/
நில எடுப்பு அலுவலர்
மற்றும் 2, 3 கோருரிமையாளர்கள்.

இம்மனு 23.02.2026ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/1ம் கோருரிமையாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.காளிதாஸ் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/நில எடுப்பு அலுவலர் தரப்பில் கூடுதல் அரசு வழக்கறிஞர் (நி.ஆ) திரு.B.சரவணன் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 கோருரிமையாளர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.அ.சுவாதீஸ்வரன் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின்

பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

சாத்தூர் வட்டாட்சியரை 16.05.1979 ஆம் தேதியிட்ட அரசாணை (பல்வகை) 523 வணிகவரி மற்றும் அறநிலையத்துறையின் அனுமதிக்கப்பட்ட நில உடமை பதிவு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சாத்தூர் வட்டம், கிராமம் எண்.55, இ.குமாரலிங்காபுரத்தின் வரலாற்று குறிப்பினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரர்/1ம் கோருரிமையாளர் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**மனுவின் சுருக்கம்:-**

2)1ம் எதிர்மனுதாரர்/நில எடுப்பு அலுவலர் குமாரலிங்காபுரம் கிராமம், புல எண்.265/4ல் கண்ட சொத்தை ஆர்ஜிதம் செய்து, அதற்கான கோருரிமை சம்பந்தமாக பிரச்சனை இருப்பதாக கருதி மேற்படி ஆர்ஜித நிலத்திற்கான தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார். மேற்படி ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் தற்சமயம் சாத்தூர் வட்டம் கி.குமாரலிங்காபுரம் கிராமத்தில் அமைந்துள்ளது. மேற்படி இ.குமாரலிங்காபுரம் வருவாய் கிராமம் உருவாக்கப்படுவதற்கு முன்பு ஆர்ஜித சொத்துக்கள் மணிப்பார்பட்டி கிராமத்தில் அமைந்து இருந்தது. மேற்படி ஆர்ஜித சொத்துக்கள் சம்பந்தமாக சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களில் மணிப்பார்பட்டி கிராமம் எனக் காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும் ரீ சர்வே செட்டில்மெண்ட் நகலும், ஆர்ஜித சொத்து மணிப்பார்பட்டி கிராமத்தில் உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்சமயம் புதிய இ.குமாரலிங்காபுரம் கிராமம் மணிப்பார்பட்டி கிராமத்தில் உள்ள சொத்துக்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளது.

3)ஆனால் 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 கோருரிமையாளர்கள் பழைய ஆவணங்களிலும், தற்போது வருவாய் ஆவணங்களிலும் உள்ள பதிவை பயன்படுத்தி குழப்பமான சங்கதிகளை தெரிவித்து வருகின்றனர். எனவே, மேற்படி விசயத்தினை தெளிவுபடுத்தும் விதமாக சாத்தூர் வட்டம், இ.குமாரலிங்காபுரம் வருவாய் கிராமம் உருவாக்கப்பட்டதற்கான 16.05.1979 ம் தேதியிட்ட அரசாணை (பல்வகை) 523 வணிகவரி மற்றும் அறநிலையத்துறையின் அனுமதிக்கப்பட்ட நில உடமை பதிவு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சாத்தூர் வட்டம், கிராமம் எண்.55, இ.குமாரலிங்காபுரத்தின் வரலாற்று குறிப்பு மற்றும் மேற்படி அரசாணையை நீதிமன்றத்திற்கு வரவழைக்க வேண்டியது அவசியமாய் உள்ளது. அதன்மூலம் மனுதாரர்/1ம் கோருரிமையாளர் வழக்கினை நிரூபிக்க இயலும். ஆகவே, மனுப்படி உத்தரவாகவேண்டும் என்று பிரார்த்திக்கப்பட்டுள்ளது.

4)1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

**<u>2, 3 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>:–**

5)மனு பத்தி 3ல் புல எண்.265/4ல் கண்ட நிலம் சுட்டுகை அதிகாரியால் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, ஆர்ஜித கோருரிமைக்காக நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளது உண்மையென ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் தற்போது சாத்தூர் தாலுகா, இ.குமாரலிங்காபுரம் கிராமத்தில் அமைந்துள்ளது என்றும் இ.குமாரலிங்காபுரம் வருவாய் கிராமம் உருவாக்கும் முன்பு ஆர்ஜித சொத்துக்கள் மணிப்பாறைப்பட்டி

கிராமத்தில் அமைந்திருந்தது என்றும், ஆர்ஜித சொத்து சம்பந்தமாக சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களில் மணிப்பாறைப்பட்டி கிராமம் என கண்டுள்ளது என்றும், மேலும் ரீ–சர்வே, ரீ–செட்டில்மெண்ட் பதிவேடுகளில் ஆர்ஜித சொத்து மணிப்பாறைப்பட்டி கிராமத்தில் உள்ளது என மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களில் கண்டுள்ளது என்றும், ஆனால் தற்சமயம் இ.குமாரலிங்கபுரம் கிராமம், மணிப்பாறைப்பட்டி கிராமத்தில் உள்ள சொத்துக்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் தங்கள் தரப்பில் பழைய ஆவணங்களையும், வருவாய் ஆவணங்களையும் பயன்படுத்தி குழப்பமான சங்கதிகள் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், சாத்தூர் தாலுகா, இ.குமாரலிங்காபுரம் வருவாய் கிராமம், 16.05.1979 ம் தேதியிட்ட அரசாணை (பல்வகை) 523 வணிகவரி மற்றும் அறநிலையத்துறையில் அனுமதிக்கப்பட்ட நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாத்தூர் வட்டம், கிராம எண்.55, இ.குமாரலிங்காபுரம் கிராமத்தின் வரலாற்று குறிப்பு மற்றும் மேற்படி அரசாணை நீதிமன்றத்திற்கு வரவழைக்க வேண்டியது அவசியமாய் உள்ளது என்றும், மனுதாரர் வழக்கை நிரூபணம் செய்ய மேற்படி ஆவணம் அவசியமானது என்று மனுதாரர் குறிப்பிட்டுள்ளவை யாவும் பொய்யென்றும், உண்மைக்குப் புறம்பானவை என்றும் மறுக்கப்படுகிறது.

6)மனுதாரர்/1ம் கோருரிமையாளர் தரப்பில் நீதிமன்றத்தில் ஏற்கனவே தாக்கல் செய்த கோரிக்கை மனுவிலோ, நில எடுப்பு தனி வட்டாட்சியர் விசாரணையிலோ, மனுதாரர் கோரும் மணிப்பாறைப்பட்டி கிராமம், இ.குமாரலிங்கபுரத்துடன் இணைக்கப்பட்டது என்றும், எனவே, சார்பதிவகத்தில் பதிவான

மணிப்பாறைப்பட்டி இ.குமாரலிங்கபுரம் கிராமத்துடன் தமிழ்நாடு அரசு 1979ம் வருட அரசாணையின்படி இணைக்கப்பட்டது என சொல்லியுள்ள சங்கதிகளை மனுதாரர்/1ம் கோருரிமையாளர் தாவா வழக்கில் தாக்கல் செய்த கோரிக்கையில் குறிப்பிடாத நிலையில், மனுதாரர் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அடிப்படையிலேயே தன் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ள நிலையில், தற்போது மனுதாரர் தரப்பில் கோரிக்கை மனுவில் குறிப்பிடாத சங்கதிகளைப் பொறுத்து புதியதாக சாட்சியை விசாரிக்க வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து தருவிக்க கோரப்பட்டுள்ளது வழக்கின் போக்கை முற்றிலும் திசை திருப்பும் முயற்சியாக உள்ளதால் தாவா மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர் தரப்பில் ஏற்கனவே நீதிமன்றத்தில் உள்ள சாட்சிய விசாரணைக்கு முரணாக தாவா மனு மூலம் பரிகாரம் கோரியுள்ளது செல்லத்தக்கதல்ல.

7)மனுதாரர் ஆர்ஜித சொத்தில் உரிமை கோரியுள்ள நிலையில், மனுதாரர் உரிய சொத்துரிமை ஆவணங்கள் அடிப்படையில் ஆர்ஜித சொத்தில் அவருக்குள்ள உரிமையை நிரூபிக்க தவறிவிட்டு வழக்கின் போக்கை மாற்றி தொடர்பில்லாத ஆவணங்களை நீதிமன்றத்திற்கு தருவித்து குழப்பம் ஏற்படுத்தி சட்டத்திற்கு புறம்பாக ஆதாயம் அடையவேண்டும் என்ற எண்ணத்தில் மனுதாரர் தாவா மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் நீதிமன்றத்திற்கு தருவிக்க கோரியுள்ள ஆவணங்கள் மூலம் மனுதாரரின் கோரிக்கையை நிரூபிக்க இயலும் என்று மனுவில் குறிப்பிட்டுள்ளது பொய்யாகும். மனுதாரருக்கு ஆர்ஜித நிலத்தில் எவ்வித பாத்தியமும், உரிமையும் இல்லாத நிலையில், வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்களை

தருவிக்கக்கோரி அதன்மூலம் சட்டத்திற்கு புறம்பாக ஆதாயம் அடைய தாவா மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் மனுவில் தருவிக்கக் கோரியுள்ள ஆவணங்களுக்கும், வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லாத காரணத்தினால் மனுவை தள்ளுபடி செய்யவேண்டியது அவசியமாயும், நியாயமாயும் இருக்கின்றது. மனுவை அனுமதிக்கும்பட்சத்தில், இந்த எதிர்மனுதாரருக்கு அளவிட முடியாத இழப்பும், கஷ்ட நஷ்டமும் ஏற்படும். மனுதாரர் அசல் வழக்கில் தீர்ப்பு ஏற்படுவதை காலதாமதம் ஏற்படுத்தும் நோக்கத்தில் காலங்கடந்து தாவா மனுவை தாக்கல் செய்துள்ளார். ஆகவே, மனுவினை இந்த எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

8)இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்,

**இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?**

என்பதேயாகும்.

<u>பிரச்சினைக்கான தீர்வு</u>:–

9)மனுதாரர் தரப்பில், 1ம் எதிர்மனுதாரர் குமாரலிங்காபுரம் கிராமம், புல எண்.265/4ல் கண்ட சொத்தை ஆர்ஜிதம் செய்து, அதற்கான கோருரிமை சம்பந்தமாக பிரச்சனை இருப்பதாக கருதி, ஆர்ஜித நிலத்திற்கான தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளதாகவும், ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் தற்சமயம் சாத்தூர் வட்டம், கி.குமாரலிங்காபுரம் கிராமத்தில் அமைந்துள்ளதாகவும், இ.குமாரலிங்காபுரம் வருவாய் கிராமம் உருவாக்கப்படுவதற்கு முன்பு ஆர்ஜித சொத்துக்கள் மணிப்பாரப்பட்டி கிராமத்தில் அமைந்திருந்தது என்றும் ஆர்ஜித சொத்துக்கள் சம்பந்தமாக சார்பதிவாளர்

அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களில் மணிப்பார்பட்டி கிராமம் என்று காண்பிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் ரீ சர்வே செட்டில்மெண்ட் நகலும், ஆர்ஜித சொத்து மணிப்பார்பட்டி கிராமத்தில் உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றும் ஆனால் தற்சமயம் புதிய இ.குமாரலிங்காபுரம் கிராமம் மணிப்பார்பட்டி கிராமத்தில் உள்ள சொத்துக்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளது என்றும் ஆனால் 2, 3 எதிர்மனுதாரர்கள் பழைய ஆவணங்களிலும், தற்போது வருவாய் ஆவணங்களிலும் உள்ள பதிவை பயன்படுத்தி குழப்பமான சங்கதிகளை தெரிவித்து வருகின்ற காரணத்தினால், மேற்படி விசயத்தினை தெளிவுபடுத்தும் விதமாக சாத்தூர் வட்டம், இ.குமாரலிங்காபுரம் வருவாய் கிராமம் உருவாக்கப்பட்டதற்கான 16.05.1979 ம் தேதியிட்ட அரசாணை (பல்வகை) 523 வணிகவரி மற்றும் அறநிலையத்துறையின் அனுமதிக்கப்பட்ட நில உடமை பதிவு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சாத்தூர் வட்டம், கிராமம் எண்.55, இ.குமாரலிங்காபுரத்தின் வரலாற்று குறிப்பினை சாத்தூர் வட்டாட்சியர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடவேண்டும் என்று வாதிடப்பட்டது.

10)1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

11)2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில், புல எண்.265/4ல் கண்ட நிலம் சுட்டுகை அதிகாரியால் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, ஆர்ஜித கோருரிமைக்காக நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளது உண்மையென ஒப்புக்கொள்ளப்படுவதாகவும், மனுதாரர் தரப்பில் நீதிமன்றத்தில் ஏற்கனவே தாக்கல் செய்த கோரிக்கை மனுவிலோ, நில எடுப்பு தனி வட்டாட்சியர்

விசாரணையிலோ, மனுதாரர் கோரும் மணிப்பாறைப்பட்டி கிராமம், இ.குமாரலிங்கபுரத்துடன் இணைக்கப்பட்டது என்றும், எனவே, சார்பதிவகத்தில் பதிவான மணிப்பாறைப்பட்டி இ.குமாரலிங்கபுரம் கிராமத்துடன் தமிழ்நாடு அரசு 1979ம் வருட அரசாணையின்படி இணைக்கப்பட்டது என்றும் சொல்லியுள்ள சங்கதிகளை மனுதாரர் தாவா வழக்கில் தாக்கல் செய்த கோரிக்கையில் குறிப்பிடாத நிலையில், மேற்படி சங்கதிகளைப் பொறுத்து புதியதாக சாட்சியை விசாரிக்க வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து தருவிக்க கோரப்பட்டுள்ளது வழக்கின் போக்கை திசை திருப்பும் முயற்சியாக உள்ளதால் தாவா மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும் மனுதாரர் ஆர்ஜித சொத்தில் உரிமை கோரியுள்ள நிலையில், சொத்துரிமை ஆவணங்கள் அடிப்படையில், ஆர்ஜித சொத்தில் அவருக்குள்ள உரிமையை நிரூபிக்கவேண்டும் என்றும் தொடர்பில்லாத ஆவணங்களை நீதிமன்றத்திற்கு தருவித்து குழப்பம் ஏற்படுத்தி சட்டத்திற்கு புறம்பாக ஆதாயம் அடையவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் அந்த ஆவணங்களுக்கும், வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லாத காரணத்தினால், மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும் என்று வாதிடப்பட்டது.

12)1ம் எதிர்மனுதாரரால் சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்காக குமாரலிங்காபுரம் கிராமம் சர்வே எண்.265/4ல் கண்ட நிலத்தை ஆர்ஜிதம் செய்த வகையில், அதற்கான கோருரிமை சம்பந்தமாக பிரச்சனை இருப்பதாக கருதி, ஆர்ஜித நிலத்திற்கான நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள தொகையினை பெறுவதற்காக தாவா அசல் மனுவானது தாக்கல் செய்யப்பட்டு, அதில்

2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பிலும், மனுதாரர் தரப்பிலும் தனித்தனியாக கோரிக்கை மனு தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர் தரப்பில் இரண்டு சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, கோ.சா.ஆ.1 முதல் 11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, மனுதாரர் தரப்பில் மேலும் சாட்சி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் தற்சமயம் சாத்தூர் வட்டம், கி.குமாரலிங்காபுரம் கிராமத்தில் அமைந்துள்ளதாகவும், இ.குமாரலிங்காபுரம் வருவாய் கிராமம் உருவாக்கப்படுவதற்கு முன்பு ஆர்ஜித சொத்துக்கள் மணிப்பார்பட்டி கிராமத்தில் அமைந்திருந்தது என்றும் ஆர்ஜித சொத்துக்கள் சம்பந்தமாக சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களில் மணிப்பார்பட்டி கிராமம் என்று காண்பிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் ரீ சர்வே செட்டில்மெண்ட் நகலும், ஆர்ஜித சொத்து மணிப்பார்பட்டி கிராமத்தில் உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றும் ஆனால் தற்சமயம் புதிய இ.குமாரலிங்காபுரம் கிராமம் மணிப்பார்பட்டி கிராமத்தில் உள்ள சொத்துக்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளது என்றும் ஆனால் 2, 3 எதிர்மனுதாரர்கள் பழைய ஆவணங்களிலும், தற்போது வருவாய் ஆவணங்களிலும் உள்ள பதிவை பயன்படுத்தி குழப்பமான சங்கதிகளை தெரிவித்து வருகின்ற காரணத்தினால், மேற்படி விசயத்தினை தெளிவுபடுத்தும் விதமாக சாத்தூர் வட்டம், இ.குமாரலிங்காபுரம் வருவாய் கிராமம் உருவாக்கப்பட்டதற்கான 16.05.1979 ம் தேதியிட்ட அரசாணை (பல்வகை) 523 வணிகவரி மற்றும் அறநிலையத்துறையின் அனுமதிக்கப்பட்ட நில உடமை பதிவு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சாத்தூர் வட்டம், கிராமம் எண்.55, இ.குமாரலிங்காபுரத்தின் வரலாற்று குறிப்பினை சாத்தூர் வட்டாட்சியர்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்பட்சத்தில், மனுதாரர் அவரது வழக்கினை நிரூபிக்க இயலும் என்றும் கூறி, மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

13)இவ்வாறான நிலையில், ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தின்பேரில் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள தொகையினை பெறுவதற்காக தாவா அசல் மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலும், அது மனுதாரர் தரப்பில் மேலும் சாட்சிகள் விசாரணைக்காக நிலுவையில் இருந்து வரும் நிலையிலும், நில எடுப்பு அலுவலர் தரப்பில் மனுவினை ஆட்சேபித்து எதிருரை தாக்கல் செய்யப்படாத நிலையிலும், தரப்பினர்களுக்கு அவர்களது தரப்பு வழக்கினை நிரூபிக்கப் போதுமான வாய்ப்பு அளிக்கப்படவேண்டியது அவசியம் என்பதாலும், மனுதாரருக்கு அவரது தரப்பு வழக்கினை நிரூபிக்க ஒரு சந்தர்ப்பம் அளித்து இம்மனுவினை அனுமதிப்பதினால், எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என்பதாலும், இம்மனு அனுமதிக்கக்கூடியது என்று இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

14)முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு, சாத்தூர் வட்டாட்சியர் 16.05.1979 ஆம் தேதியிட்ட அரசாணை (பல்வகை) 523 வணிகவரி மற்றும் அறநிலையத்துறையின் அனுமதிக்கப்பட்ட நில உடமை பதிவு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சாத்தூர் வட்டம், கிராமம் எண்.55, இ.குமாரலிங்காபுரத்தின் வரலாற்று குறிப்பினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டுமென உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K JEYAKUMAR Digitally signed by K JEYAKUMAR

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**விருதுநகர் மாவட்டம் (இ)**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**<u>இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை**

K JEYAKUMAR Digitally signed by K JEYAKUMAR

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**விருதுநகர் மாவட்டம் (இ)**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்
ஸ்ரீவில்லிபுத்தூர்
எல்.ஏ.ஓ.பி.438/2022 ல்
உள்ள
இ.ம.எண்.2/2025
வரைவு/சீரான உத்தரவு
02.03.2026